


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற 19 வது தேசிய புள்ளிஇயல் தின விழாவில், தரவுகளின் அடிப்படையில் சிறப்பு ஆய்வறிக்கை தயார் செய்யும் போட்டியில் மாநில மற்றும் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாநிலத் திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர். ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திருமதி ஆர். ஜெயா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (30.6.2025) சென்னை மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற 19 வது தேசிய புள்ளிஇயல் தின விழாவில் புள்ளிஇயல் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மாநிலத் திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர். ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் திருமதி ஆர். ஜெயா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## போகிறபோக்கில் வார்த்தை ஜாலத்திற்காகச் சொல்லவில்லை

# ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் புள்ளிவிவரத்துடனும் ஆதாரத்துடனும்தான் சொல்கிறோம்!

## சென்னையில் நடைபெற்ற தேசிய புள்ளியியல் தின விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஜூலை.1-**

**சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் ‘பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை’ ஏற்பாட்டில் நடைபெற்ற ‘தேசிய புள்ளியியல் தின விழா’ சிறப்பு நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

‘பாதர் ஆஃப் இந்தியன் ஸ்டாடிஸ்டிக்ஸ்’ என்று போற்றப்படுகின்ற பேராசிரியர் பி.சி.மகலனோபிஸ் (Prasanta Chandra Mahalanobis) அவர்களின் பிறந்தநாளை இன்று தேசிய புள்ளியியல் நாளாக கொண்டாடுகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கெல்லாம் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

### புள்ளியியலின் அருமை

புள்ளியியலின் அருமை நிறைய பேருக்குத் தெரியாமல், புரியாமல் இருந்த காலம் ஒன்று இருந்தது. வெளிநாடுகளில் புள்ளியயல் துறைக்குக் கொடுத்த முக்கியத்துவம் நம்முடைய நாட்டில் கிடையாது. அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை நம் நாட்டில் கொடுக்க சிறிது காலதாமதம் ஆனது.

அது பற்றிய விழிப்புணர்வும் நம் நாட்டில் குறைவாகவே இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. புள்ளியியலின் அவசியத்தை நாம் அனைவரும் இன்றைக்குத் தாமதமாகப் புரிந்து கொண்டிருக்கிறோம்.

புள்ளியியல் என்று சொன்னால் அது ஒரு நாட்டிற்கோ, ஒரு நிறுவனத்திற்கு மட்டும்தான் தேவை என்ற சூழல் இன்றைக்கு கிடையாது. ஏனென்றால், புள்ளியியல் இன்றைக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் தேவை என்று நிலைமை மாறி இருக்கிறது.

### ஆரோக்கியமான முன்னேற்றம்

உங்கள் வீட்டின் மாத பட்ஜெட் மற்றும் வருடாந்திர பட்ஜெட் எல்லாவற்றையும் முறையாக பதிவுசெய்து, அதை அனலைஸ் செய்து பார்க்கின்ற பழக்கம், இன்றைக்கு நம் தமிழ்நாட்டில் உள்ள பல குடும்பகளில் உருவாகி இருக்கிறது. இவையெல்லாம் மிக மிக முக்கியமான முன்னேற்றம், ஆரோக்கியமான மாற்றம்.

இப்போது நாம் ஏ.ஐ என்று சொல்கின்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப (ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ்) காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு நல்ல ஏ.ஐ மாடலுக்கு ஆழமான டேட்டா இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்துக்கு மட்டுமல்ல, ஒரு நல்ல அரசாங்கத்திற்கும் துல்லியமான டேட்டாதான் அடிப்படை.

அந்த டேட்டாவை சேகரித்துத் தருகின்ற துறையாக சிறப்பு வாய்ந்த துறையாக இன்றைக்கு இந்தப் புள்ளியியல் துறை சிறப்பாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### திராவிட மாடல் அரசு

நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை நிறைய மக்கள் நலத் திட்டங்களை, ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தத் திட்டங்கள் எல்லாம், மக்களுக்கு எந்த அளவிற்கு சென்று சேர்கின்றன, பயன்படுகின்றன, மக்களின் வாழ்வில் அவை எப்படிப்பட்ட சிறப்பான மாற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு இந்த அரசுக்கும் முதலமைச்சருக்கும் நீங்கள்தான் துணை நிற்கின்றீர்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அந்தத் திட்டத்தில் மாணவர்களின் வருகைப் பதிவு எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பது, இந்தப் புள்ளியியல் துறை எடுத்த சர்வே மூலம்தான், நம் அரசுக்கு தெரியவந்தது.




### முக்கியமான ஒரு காரணம்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில், பெறப்பட்ட மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் உங்களால் ஆய்வு செய்யப்பட்டு, உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்தத் திட்டத்தின் வெற்றிக்கும் இந்தத் துறை, மிக முக்கியமான ஒரு காரணம்.

அதுமட்டுமல்ல, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் ஆகியவற்றால், உயர்கல்வி மாணவர் சேர்க்கை (GER) விகிதம் எப்படி அதிகமாகியது. அதேபோல் விடியல் பயணம் திட்டத்தால், ஒவ்வொரு மகளிரும் மாதம் கிட்டத்தட்ட 900 ரூபாய் சேமிக்கிறார்கள் என்பதையும் இந்தத் துறைதான் ஆய்வுசெய்து கண்டுபிடித்துச் சொன்னது.

அதுமட்டுமல்ல, விவசாயக் கூலி விவரங்களில் தொடங்கி, மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக் குறியீடுகள் வரை உங்களின் தரவுகள்தான் இந்த அரசுக்கு ஓர் அளவுகோலாக திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

### வெளிப்படையாகச் சொல்கிறோம்

இன்றைக்கு நாம் ‘திராவிட மாடல்’ என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். அதற்கான அடிப்படைகள் எல்லாமே இந்தப் புள்ளிவிவரங்களை வைத்துத்தான் பெருமையாகச் சொல்கிறோம். ஏதோ போகிறபோக்கில் வார்த்தை ஜாலத்திற்காக திராவிட மாடல் என்று நாம் சொல்லவில்லை. எல்லாவற்றையும் புள்ளிவிவரத்தோடு ஆதாரத்தோடுதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எல்லா புள்ளி விவரங்களையும், டேட்டாக்களையும் நாம் வெளிப்படையாகச் சொல்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் பல சர்வேக்களை நாமே எடுத்து மக்களிடம் புள்ளிவிவரங்களை கொடுக்கிறோம். புள்ளி விவரங்களை சில அரசுகள் மறைக்கும். சிலர் வெளியிட தயங்குவார்கள். ஏனென்றால், அந்த புள்ளிவிவரங்கள் அந்த அரசியலுக்கு சில சமயங்களில் சாதகமாக இருக்காது. அதனால் அதை மறைப்பார்கள். அதை மறைக்கும் பொழுது உண்மையான சமூக நிலைமை ஆராய்ச்சியாளர்களுக்கும், திட்டம் தீட்டக் கூடியவர்களுக்கும் தெரியாமல் போய்விடும்.

ஆனால், நம் திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை, எங்களின் திட்டங்களின் மீதும், அதன் செயல்பாடுகள் மீதும் எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் எல்லா தரவுகளையும், புள்ளிவிவரங்களையும் நாங்கள் பொது வெளியில் வைக்கிறோம்.

திட்டங்களில் சில இடங்களில் சரிவுகள் இருந்தால்கூட, அதைச் சுட்டிக்காட்டும் பொழுது, அதை ஏற்றுக் கொண்டு சரி செய்வதற்கு நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று நினைக்கும் அனைத்து ஆட்சியாளர்களுக்கும், முதுகெலும்பு போல இருக்கக் கூடியது, இந்தப் புள்ளியியல் துறைதான்.

### புள்ளியியல் துறை வெற்றி

புள்ளிவிவரங்கள் என்ன கருத்தைச் சொல்கிறது, என்ன ட்ரெண்ட்டை காட்டுகிறது என்பதை நாம் சரியாக புரிந்துகொள்வதுதான் புள்ளியியல் துறையின் வெற்றிக்கு அடிப்படையாக இருக்கும். இங்குகூட சிறப்பு ஆய்வறிக்கைப் போட்டி நடத்தப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு சர்வே எடுத்து அதை எவ்வாறு செயல்படுத்தலாம் என்ற விதத்தில் நடத்தப்பட்ட போட்டியில் 240 பேர் பங்கேற்று உள்ளீர்கள் என்பது உள்ளபடியே ஒரு மகிழ்ச்சியான செய்தி. அதில் பங்கேற்ற அத்தனை பேருக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் மாவட்ட மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகத்தின் அனைத்துத் துறை வளர்ச்சிக்கும் நம் புள்ளியியல் துறையின் பங்கு மிக மிக முக்கியமானது. அப்படிப்பட்ட முக்கியமான துறையைச் சேர்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும், அதேபோல் புள்ளியியல் துறையில், உலக அளவில் வருகின்ற புதிய ஆய்வுகளை உள்வாங்கிக் கொண்டு, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேன்மேலும் வளர்ச்சி அடைய இந்தத் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

விழாவில் திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், துறையின் அரசு தலைமைக் கூடுதல் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா ஐ.ஏ.எஸ், பொருளியல் மற்றும் புள்ளியல் துறையின் ஆணையர் ஜெயா ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் ஐ.ஏ.எஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, தருமபுரி மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு மத்திய, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் மேற்கொண்டார்!









இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று, தருமபுரி மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு மத்திய, ஈரோடு தெற்கு மாவட்டங்களிலிருந்து மாவட்ட சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் முன்னிலையில் நேர்காணல் செய்தார். வந்திருந்தவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டு-அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழகப் பணி சிறக்க வாழ்த்தினார்.